# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 08 புதன்கிழமை 24.09.2025 கதிர் 319




யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

Yarl Muttram

Youtube Channel



## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரை சந்தித்துப் பேசிய ஜனாதிபதி அநுரகுமார

நியூயோர்க், செப். 24

ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கும் இடையிலான சந்திப்பு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அலுவலகத்தில் அமெரிக்க நேரப்படி நேற்று பிற்பகல் நடைபெற்றது.

இதன்போது, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர், ஜனாதிபதியை அமோகமாக வரவேற்றதுடன் கடந்த வருடத்தில் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை எட்டியுள்ள

7➤

# ஈஸ்டர் தாக்குதல்: நீதி வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

கொழும்பு, செப். 24

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் நீதியான விசாரணையைக் கோருகின்றனர். எனினும், நிலைமை தற்போது பாரதூரமாகியுள்ளது.

ஜெனிவாவில் தற்போது நடந்து வரும் கலந்துரையாடலில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றின் தந்தை, சூம் தொழில்நுட்பம் மூலம் இணைந்து கொண்டு, இலங்கையில் நடந்து வரும் விசாரணைகளில் திருப்தி இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இது போன்ற விடயங்கள் நாட்டுக்குப் பொருத்தமில்லாத விடயங்கள் என்பதால், இங்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.” - என்றார்.



## மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்



யாழ்ப்பாணம், செப். 24

யாழ்ப்பாணத்தில் மின் அழுத்தியைப் பயன்படுத்திய போது மின்சாரம்தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், உடுவில் பகுதியைச் சேர்ந்த விஷ்ணுராஜ் ஜதுர்மன் (வயது 21)

7➤



## ரணில் – சஜித் கட்சிகள் ஒன்றிணைவது நல்லது!

### மனோ அணி தெரிவிப்பு

கொழும்பு, செப். 24

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிரணிகள் ஓரணியில் திரண்டாதல் அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

7➤

## திலீபனின் 10ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 24

தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தலில் 10 ஆம் நாள் நிகழ்வு இன்று புதன்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணம், நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில், சுடரேற்றி, திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் முன்னாள் போராளிகள் மற்றும் தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் கலந்துகொண்டனர்.





- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -



## இலங்கை – இந்திய வெளிவிவகார அமைச்சர்கள் சந்திப்பு

கொழும்பு, செப் .24

இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை அமெரிக்காவில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அமெரிக்காவில் இடம்பெறும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தின் ஒரு பகுதியாக குறித்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான வலுவான நட்புறவையும் நெருங்கிய ஒத்துழைப்பையும் மீண்டும் உறுதிப்படுத்த இந்திய வெளியுறவு அமைச்சரைச் சந்தித்ததாக அமைச்சர் விஜித ஹேரத் தமது எக்ஸ் கணக்கில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்க ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் அமைச்சர் விஜித ஹேரத்தும் அமெரிக்கா சென்றுள்ளார்.

அதன்படி, இன்று (24) அமெரிக்க நேரப்படி பிற்பகல் 3.15 மணிக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க உரையாற்ற உள்ளார். இந்த விஜயத்தின் போது, ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் மற்றும் பல உலகத் தலைவர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்த உள்ளார்.

இதேவேளை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி வெளியுறவுச் செயலாளர் எலிசன் ஹூக்கரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் பொதுவான முன்னுரிமைகள் குறித்து இதன்போது விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## எக்ஸ்பிரஸ் பேரழிவுக்கான இழப்பீட்டை பெற அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

கொழும்பு, செப் .24

எக்ஸ்பிரஸ் பேரழிவுக்கான இழப்பீட்டை பெற கட்சி, அரசியல் பேதங்களை கடந்து அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட பேரழிவுக்குப் பின்னர், உயர் நீதிமன்றம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை இழப்பீடாக அறவிட உத்தரவிட்டது.

ஆனால் அந்த இழப்பீட்டை வழங்க சிங்கப்பூரில் உள்ள அந்த கப்பலின் நிறுவனம் நிராகரித்துள்ளது.

81 கொள்கலன்களில் உயிருக்கு ஆபத்தான பிளாஸ்டிக் துகள்கள், அதிக அளவு அமிலம் கசிந்து சுற்றுச்சூழலில் பெரும் அழிவை ஏற்படுத்தியது.

கட்டார் மற்றும் இந்தியா போன்ற நாடுகள் இந்த கப்பல் வருகையை நிராகரித்தபோதும், நமது நாட்டு கடல் பரப்பினுள் பயணிக்க அனுமதியளித்ததைத் தொடர்ந்து பெரும் நஷ்டமே ஏற்பட்டது.

இன்றும் கூட, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வில்லை.

எனவே, இந்த பிரச்சினையில் நாம் ஒரு நாடாக ஒன்றிணைந்து குறித்த நிறுவனத்திற்கு எதிராக அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (ஐ)

## மின்சார சபை ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை தீவிரம்!

மின்சார சபை ஊழியர் சங்கங்கள் முன்னெடுத்துவரும் தொழிற்சங்க நடவடிக்கை திட்டமிட்டப்படி இன்று (24) நள்ளிரவு வரை தொடரும் என இலங்கை மின்சார சபையின் மின்சார தொழில்நுட்ப வல்லுநர் சங்க தலைவர் கோசல அபேசிங்க தெரிவித்துள்ளார். இலங்கை மின்சார சபையின் தன்னிச்சையான மறுசீரமைப்புக்கு அதாவது இலங்கை மின்சார சபையை நான்கு பகுதிகளாகப் பிரிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதன்படி முதல் கட்டமாக, சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கை கடந்த 04ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் எதிர்வரும் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் அனைத்து தொழிற்சங்கங்களும் கூடி ஆராய்ந்ததன் பின்னர் இன்று பிற்பகல் இறுதி முடிவு எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கட்டுவலையில் களவு செய்யாதீர்கள்! எங்கள் வாழ்வாதாரத்தை பறிக்காதீர்கள்! திருமலையில் மீனவர்கள் போராட்டம்





கட்டு வலையிலுருந்து மீன்களை திருடுபவர்களுக்கும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை சீரழிப்போருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி திருகோணமலை -உட்துறைமுக வீதியில் உள்ள மீன்பிடி திணைக்களத்தின் முன்பாக மீனவர்கள் இன்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது “எங்கள் வாழ்வாதாரத்தை பறிக்காதீர்கள்”, “கட்டுவலையில் களவு செய்யாதீர்கள்”, “கட்டுவலைகளை சேதமாக்காதீர்கள்”, போன்ற கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்தியும் கோசங்களை எழுப்பியும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். திருகோணமலை -அரசடி சூசையப்பர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த குறித்த போராட்டத்தில் ஏனைய மீனவ சங்கங்களும் இணைந்து கொண்டு தங்களது ஆதரவையும் வழங்கியிருந்தனர். குறித்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜரினை மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் மாவட்ட உதவிப்பணிப்பாளரிடம் கையளித்தனர்.

குறித்த மீனவர் சங்கத்தின்கீழ் 56 இடங்களில் கட்டு வலை மீன்பிடி இடம்பெறுகிறது. மேற்படி கட்டுவலையில் இருந்து மீன்களை சிலர் திருடுகின்றனர்.

கணவாய் மீன்களைப் பிடிப்பதற்கு அவர்கள் பயன்படுத்தும் விசேட தூண்டில்களால் கட்டு வலைகள் சேதமடைகின்றன. வலைகள் சேதமடைவதால் கூட்டில் இருக்கும் மீன்கள் வெளியேறி விடுகின்றன.

1935 ஆம் ஆண்டு முதல் நான்கு தலைமுறைகளாக கட்டுவலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடும் தமது வாழ்வாதாரத்தை அரசாங்கம் பாதுகாத்து திருட்டில் ஈடுபடுவோரை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமெனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். (ஐ)

# இந்திய கடற்படைத் தளபதி, பிரதமரைச் சந்தித்தார்





கொழும்பு, செப் .24

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு 2025 செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்த இந்திய கடற்படைத் தளபதி, **Admiral Dinesh K Tripathi** பாராளுமன்ற வளாகத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை செவ்வாய்க்கிழமை சந்தித்தார்.

இந்திய கடற்படைத் தளபதி மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற இந்த உத்தியோகபூர்வ சந்திப்பில், இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் நீண்டகால நட்புறவை வலுப்படுத்துதல் உள்ளிட்ட இரு தரப்பினருக்கும் முக்கியமான பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், கடல்சார் பாதுகாப்பு மற்றும் பிராந்திய பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் உள்ளிட்ட சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் கூட்டு அணுகுமுறையுடன் செயற்படுவதன் முக்கியத்துவமும் பற்றி வலியுறுத்தப்பட்டது. மேலும், இந்நாட்டு கடற்படை அதிகாரிகளுக்கான பயிற்சி வாய்ப்புகளை இந்திய அரசாங்கத்தினால் வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை கடற்படை 12ஆவது தடவையாகவும் ஏற்பாடு செய்யும் காலி கலந்துரையாடல் சர்வதேச கடல்சார் மாநாடு - 2025 இல் கலந்துகொண்டதன் பின்னர், 2025 செப்டம்பர் 25ஆம் திகதி இந்திய கடற்படைத் தலைவர் யுனஅசையட னுைநௌா மு வுசனியவாை மீண்டும் நாடு திரும்ப இருக்கின்றார்.

இச்சந்திப்பில் இந்திய அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள், பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரீ, பிரதமரின் மேலதிக செயலாளர் சாகரிகா போகஹவத்த, வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சின் தெற்காசிய மற்றும் **SARCC** பிரிவின் பணிப்பாளர் நாயகம் சமந்த பத்திரண ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ)



# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் நீதி அமைச்சர் இன்று ஜெனிவா பயணம்!

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரில் நடைபெறும் காணாமல்போனோர் தொடர்பான குழுவின் இலங்கையின் முதலாவது காலமுறை ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக இன்று புதன்கிழமை பயணமாகவுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பாக ஜெனிவாவில் நடைபெறும் இலங்கையின் முதலாவது ஆய்வுக்கூட்டம் இதுவாகும்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், காணாமல்போனோர் தொடர்பான பிரச்சினையில் இலங்கை அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள், அதன் சவால்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து நீதி அமைச்சர் விளக்கமளிக்கவுள்ளார்.

இந்தக் கூட்டம், இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை, குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினையைச் சர்வதேச அரங்கில் விவாதிப்பதற்கு ஒரு முக்கிய தளமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது(ஐ)

# குட்டியாராச்சிக்கு கடும் எச்சரிக்கை



கொழும்பு, செப் .24

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சிக்கு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன **(SLPP)** பொதுச் செயலாளர் சாகர காரியவசம், கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார். பொதுக் கூட்டங்களில் பொறுப்பற்ற மற்றும் சர்ச்சைக்குரிய அறிக்கைகளை வெளியிடுவதைத் தவிர்க்குமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

குட்டியாராச்சியின் சமீபத்திய கருத்துக்கள் கட்சித் தலைவர்களிடையே குறிப்பிடத்தக்க கவலையைத் தூண்டியுள்ளதுடன், கட்சிப் படிநிலையில் இருந்து வலுவான உள் எதிர்வினைக்கு வழிவகுத்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு' நிகழ்ச்சியில் பங்கேற்க தெலுங்கானா முதல்வருக்கு நேரில் அழைப்பு விடுத்தார் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா!!



சென்னையில் நடைபெறும் கல்வியில் சிறந்த தமிழ்நாடு விழாவிற்கான அழைப்பிதழை தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டியை அமைச்சர் டிஆர்பி ராஜா நேரில் சந்தித்து வழங்கினார். 2025-2026ம் கல்வி ஆண்டிற்கான புதுமைபெண், தமிழ் புதல்வன் திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி ஆகியோர் தொடங்கி வைக்கும் விழா, சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் சிறப்பாக நாளை நடைபெற உள்ளது.

கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்னும் கருப் பொருளில் நடக்கும் இவ்விழா, தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியினை கொண்டாடப்பட உள்ளது. விழாவில் அமைச்சர்கள், மேயர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர். இந்த நிலையில், ஹைதராபாத்தில் தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டியை நேரில் சந்தித்த தமிழ்நாடு தொழிற்துறை அமைச்சர் டிஆர்பி ராஜா, கல்வியில் சிறந்த தமிழ்நாடு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.

இதனிடையே கல்வியில் சிறந்த தமிழ்நாடு விழா குறித்து தமிழக அரசின் ஊடகச் செயலரும், வருவாய்த் துறை செயலருமான பி.அமுதா பேசுகையில்,"இந்நிகழ்ச்சி, நான் முதல்வன், முத்லவரின் காலை உணவு திட்டம், புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன், விளையாட்டின் சாதனையாளர்கள், சிறப்புக் குழந்தை சாதனையாளர்கள் இது போன்ற ஏழு திட்டங்களை உள்ளடக்கி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. செப்டம்பர் 25-ம் தேதி மாலை 4 மணி முதல் 7 மணிவரை ஒவ்வொரு சிறப்பு திட்டத்தை பற்றி சாதனையாளர்கள், பயன்பெற்றவர்கள், பங்கேற்பாளர்கள் அனுபவங்களை பகிர்வார்கள். இதில், 2025- 26ம் ஆண்டுக்கான புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் ஆகிய திட்டங்களுக்கான நிதி வெளியீடும், மாணவர்களுக்கான ரூ.1000 தரக்கூடிய ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது."இவ்வாறு தெரிவித்தார். (ஐ)

## கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங் அமலாக்கத்துறை முன் ஆஜர்



1ஒபெட் என்ற ஆன்லைன் சூதாட்ட செயலி பல கோடி ரூபாய் மக்கள் பணத்தை ஏமாற்றியதாகவும், நேரடி மற்றும் மறைமுக வரி ஏய்ப்பு செய்ததாகவும் கூறப்படும் குற்றச்சாட்டுகளின் பேரில் அமலாக்கத்துறை சட்டவிரோத பணபரிமாற்ற சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரிக்கிறது. இதில், ஆன்லைன் சூதாட்ட செயலியின் விளம்பரங்களில் நடித்த பிரபலங்கள் உள்ளிட்டவர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்படுகிறது.

அந்த வகையில், அமலாக்கத்துறையின் நோட்டீசின்படி இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஆல்ரவுண்டர் யுவராஜ் சிங் டெல்லியில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் நேற்று பகல் 12 மணிக்கு நேரில் ஆஜரானார். சில மணி நேர விசாரணையில் அவரது வாக்குமூலத்தை அமலாக்க அதிகாரிகள் பதிவு செய்தனர். சூதாட்ட செயலியினர் எப்படி தொடர்பு கொண்டனர், சம்பள பணத்தை எப்படி கொடுத்தனர், யார் அவர்கள் என்பது குறித்து பல கேள்விகள் கேட்கப்பட்டன. (ஐ)

## பொன்னியின் செல்வன் பட பாடல் தொடர்பான வழக்கில் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு எதிரான உத்தரவை ரத்து செய்தது டெல்லி ஐகோர்ட்..!!



பொன்னியின் செல்வன் பட பாடல் தொடர்பான வழக்கில் ஏ.ஆர். ரஹ்மானுக்கு எதிரான உத்தரவை டெல்லி உயர்நீதிமன்றம் ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது. மணிரத்னம் இயக்கத்தில் வெளியான 'பொன்னியின் செல்வன் 2' படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்திருந்தார். இந்தப் படத்தில் 'வீரா ராஜ வீர' என்ற பாடல் இடம்பெற்றிருந்தது. இத்தகைய, வீர ராஜ வீரா பாடலில் உஸ்தாத் பயாஸ் என்பவரது பாடலை பயன்படுத்தியதாக புகார் எழுந்தது.

சிவ ஸ்துதி என்ற பாடல் போன்று பொன்னியின் செல்வன் பட பாடல் இருப்பதாக இந்துஸ்தானி கிளாசிக்கல் பாடகர் ஃபயாஸ் வசிஃபுதின் தாகர் மனுதாக்கல் செய்திருந்தார். மனு மீதான விசாரணையில், வீரா ராஜ வீர பாடலின் காப்புரிமை தொடர்பான வழக்கில் ரூ.2 கோடியை செலுத்துமாறு தனி நீதிபதி ஏ.ஆர். ரஹ்மானுக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார். இத்தகைய தனிநீதிபதி உத்தரவுக்கு எதிராக ஏ.ஆர்.ரஹ்மான் டெல்லி ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்திருந்தார். இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஹரிசங்கர், ஓம் பிரசாத் சுக்லா தலைமையிலான அமர்வு தனி நீதிபதி உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டனர். (ஐ)

## அதிமுக மாஜி அமைச்சர் மணிகண்டனுக்கு எதிரான பாலியல் வழக்கு முடித்து வைப்பு: உச்ச நீதிமன்றம் உத்தரவு




அதிமுகவின் முன்னாள் அமைச்சர் மணிகண்டன் தன்னை திருமணம் செய்து கொள்வதாக ஏமாற்றி விட்டதாக நடிகை சாந்தினி கொடுத்த புகாரின் அடிப்படையில் மணிகண்டன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதையடுத்து அவர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் மணிகண்டனுக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கியது. இந்த நிலையில் மணிகண்டன் மீது பாலியல் புகார் அளித்த நடிகை சாந்தினி தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், "மணிகண்டனுக்கு வழங்கிய ஜாமீனை ரத்து செய்ய வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கானது உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி ஜே.கே.மகேஸ்வரி தலைமையிலான அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழ்நாடு அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், "இந்த விவகாரத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்துவிட்டது. கடந்த 2022ம் ஆண்டு இரண்டு தரப்பினரும் சமரசம் செய்து கொண்டனர். அதனை ஏற்றுக்கொண்டு தான் உயர்நீதிமன்றம் வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டது என்று விளக்கமளித்தார்.

இதையடுத்து நடிகை சாந்தினி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் பாலியல் வழக்குகளில் சமரசம் கிடையாது. இதில் சமரசம் செய்யப்பட்டது என்று தெரிவித்தது என்பது பொய்யான தகவல். வழக்கில் உயர்நீதிமன்றம் கூறிய கருத்துக்கள் எனது கண்ணியத்திற்கு எதிரானது என்பதால் அதனை நீக்க வேண்டும் என்று தெரிவித்தார். இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், "சென்னை உயர்நீதிமன்றம் சமரசம் தொடர்பான உத்தரவை பிறப்பித்த போது ஏன் இதனை எதிர்த்து புகார் கொடுத்த பெண் தரப்பில் மனு தாக்கல் செய்யவில்லை.

ஆனால் தற்போது இங்கு வந்து நீதிமன்றத்தில் இருந்து சமரசம் செய்ய ஒத்துக்கொள்ளவில்லை என்று கூறுகிறீர்கள். இதனை கண்டிப்பாக ஏற்க முடியாது. எனவே இவை அனைத்தையும் அடிப்படையாக கொண்டு இந்த மேல்முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்கிறோம். இருப்பினும் மேற்கண்ட வழக்கை மூன்று ஆண்டுகளாக ஏன் பட்டியலிடப்படவில்லை என்பதை உச்ச நீதிமன்ற பதிவாளர் விளக்க அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டு, இதுதொடர்பான வழக்கை முடித்து வைத்தனர். (ஐ)

## கலைஞர் கற்று தந்த உழைப்பு என் உதிரத்தில் இருக்கும் வரை நான் என் கடமையை நிறைவேற்றுவேன் – மு.க.ஸ்டாலின்



சென்னை கொளத்தூரில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அதில், "காலையில் இருந்து கொளத்தூர் தொகுதியில் ஆய்வு மேற்கொண்டேன். மாணவர்களின் முகத்தை பார்க்கும்போது உற்சாகம் அடைகிறேன். மாணவர்களின் முகத்தில் மகிழ்ச்சியை பார்க்கும்போது எனது கடமையை வேகமாக நிறைவேற்ற வேண்டும் என்ற உத்வேகம் தோன்றுகிறது. எனது உடலில் உயிர் இருக்கும் வரையில் கலைஞர் கற்றுத் தந்திருக்கக் கூடிய உழைப்பு என் உதிரத்தில் இருக்கும்வரை உறுதியாக நான் என் கடமையை நிறைவேற்றுவேன். ;நீங்கள் யாரும் கவலைப்பட வேண்டாம். நான் இருக்கிறேன்.

அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பெற்றுள்ள பயிற்சி சிறிய துவக்கம்தான். இதே பாதையில் வெற்றி பெற தொடர்ந்து கற்றுக்கொள்ள வேண்டும். வளர்ச்சிக்கேற்றார்போல் மாணவர்கள் அப்கிரேட் ஆக வேண்டும். ஆன்லைன் பயிற்சி வகுப்புகள் ஏராளமானவை உள்ளன, எது வேண்டுமோ அதை தேர்வு செய்து கற்க வேண்டும். படிப்புதான் கடைசி வரை வாழ்வில் துணைநிற்கும் உங்கள் எதிர்காலத்துக்கு என்ன தேவையோ அதை நோக்கி நடை போடுங்கள். தமிழ்நாட்டின் நலன் காக்க நான் இருக்கிறேன் என்பதை மறந்து விடாதீர்கள். தமிழ்நாட்டு மாணவர்கள் படிப்புக்கு திராவிட மாடல் அரசு இருக்கிறது. தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் என்பது நமது ஒற்றுமையை காட்டுகிறது,"இவ்வாறு தெரிவித்தார். (ஐ)



# போதைக்கு அடிமையான பெண்கள்

போதைக்கு அடிமையான பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது 22-40 வயதுக்குட்பட்டவர்கள் அதிகரித்து வருகின்றனர்

பெரும்பாலான போதைக்கு அடிமையானவர்கள் மேல் மாகாணத்தில் வாழ்கின்றனர்

பெரும்பாலனவர்களுக்கு மறுவாழ்வு தேவை உள்ளது

இலங்கையில் ஐஸ் போதைக்கு அடிமையானவர்கள் உட்பட பெரும்பாலான போதைக்கு அடிமையானவர்கள் சாதாரண தரத்திற்கு (சா.த) கீழே கல்வி நிலைகளைக் கொண்டுள்ளனர் என்றும், அவர்களுக்கு தீவிர மறுவாழ்வு தேவைப்படுவதாலும், வேலையில்லாமல் இருப்பதாலும் அவர்கள் இப்போது அரசுக்கு ஒரு சுமையாக மாறிவிட்டதாகவும் சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் வசந்த அதுகோரல மற்றும் அவரது குழுவினரால் நடத்தப்பட்ட இந்த ஆராய்ச்சி, 2023 ஆம் ஆண்டில் சிறைத் தரவு மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களின் வடிவங்களை பகுப்பாய்வு செய்தது.

அவர்களின் கண்டுபிடிப்புகளின்படி, 2023 ஆம் ஆண்டில் பல்வேறு குற்றங்களுக்காக 185,056 நபர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்களில், 46,939 பேர் குற்றவாளிகள், 29,192 வழக்குகள் நேரடியாக போதைப்பொருளுடன் தொடர்புடையவை.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் குருநாகல் ஆகிய நான்கு முக்கிய மாவட்டங்களில் பெரும்பாலான போதைக்கு அடிமையானவர்கள் கைது செய்யப்பட்டதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

வயதைப் பொறுத்தவரை, தண்டனை பெற்றவர்களில் 8,491 பேர் 22 முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள், அதே நேரத்தில் 8,941 பேர் 30-40 வயதுடையவர்கள், இது இளம் மற்றும் நடுத்தர வயதுடைய பெரியவர்கள் அதிகம் பாதிக்கப்பட்ட குழுவாக இருப்பதைக் குறிக்கிறது. இந்த ஆய்வு அதிகரித்து வரும் பெண் அடிமைகளின் எண்ணிக்கையையும் சுட்டிக்காட்டியது.

“போதைப்பொருள் துஷ்பிரயோகத்தில் பெண்கள் அதிகரித்து வருவது கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் சுகாதார அதிகாரிகளிடமிருந்து உடனடி கவனம் தேவைப்படும் ஒரு புதிய போக்காகும்” என்று பேராசிரியர் அதுகோரல குறிப்பிட்டார்.

இலங்கை ஐஸ் போதைப்பொருள் மற்றும் பிற



சட்டவிரோத பொருட்களின் பரவலான கிடைக்கும் தன்மையுடன் போராடி வரும் நேரத்தில் இந்த ஆய்வு வந்துள்ளது, இது போதைப்பொருள் அடிமைத்தனத்தை ஒரு பெரிய சமூக மற்றும் பொது சுகாதார சவாலாக மாற்றுகிறது.

இதற்கிடையில், ஐஸ் போதைப்பொருள் நெருக்கடியும் அரசியல் ரீதியாக மாறியுள்ளது. சமீபத்திய வாரங்களில், இலங்கையில் ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பாக பல அரசியல்வாதிகளின் பெயர்கள் வெளிவந்துள்ளன. விசாரணைகள் நடந்து வருகின்றன, மேலும் நாட்டிற்குள் போதைப்பொருள் உற்பத்தி மற்றும் இயக்கத்தை எளிதாக்குவதில் சக்திவாய்ந்த நபர்கள் ஒரு பங்கைக் கொண்டிருந்திருக்கலாம் என்று சட்ட அமலாக்க அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையில் மறுவாழ்வு பற்றிப் பேசுகையில், தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டு வாரியம் இலங்கையில் உள்ள தனியார் மற்றும் நியமிக்கப்பட்ட சிகிச்சை மையங்களின் போதைப்பொருள் சிகிச்சை செயல்முறை மற்றும் மறுவாழ்வு செயல்முறையை கண்காணித்து உதவுகிறது.

கூடுதலாக, பொருத்தமான மறுவாழ்வு செயல்முறையை உருவாக்குவதற்கு இந்த சிகிச்சை மையங்களுக்கு அறிவு மற்றும் தொழில்நுட்ப ஆலோசகர்களை இது வழங்குகிறது.

போதைப்பொருள் குற்றங்களுக்காக ஒருவர் தண்டிக்கப்பட்டால், அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு அம்பேபுஸ்ஸ, வீரவில, களுத்துறை, பல்லன்சேன, வட்டரக்க, அனுராதபுரம், மீதிரிகல, கண்டேவத்த, தல்தேன, பல்லேகலே மற்றும் கந்தக்காடு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையம் போன்ற சிறைகளில் போதைப்பொருள் சிகிச்சை மற்றும் மறுவாழ்வு வழங்கப்படும்.

மேலும், போதைப் பொருள்பயன்படுத்துபவர்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பவும், போதைப் பழக்கத்தால் ஏற்படும் சமூக சீர் குலைவுகளைக்குறைக்கவும் உதவும் நோக்கில் தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டு வாரியத்தின் சிகிச்சை மற்றும் மறுவாழ்வு பிரிவு இந்த மையங்களை இயக்குகிறது.

இந்த திட்டம் ஒரு வருடத்திற்கும் மேலாக இயங்குகிறது, இரண்டு மாத குடியிருப்பு தங்குதலுடன் தொடங்குகிறது, அதைத் தொடர்ந்து மறுபிறப்பு-தடுப்பு ஆதரவுடன். 14 நாள் ஊதியத்துடன் கூடிய குறுகிய திட்டமும் கிடைக்கிறது.

மீட்பு செயல்பாட்டில், குறிப்பாக கடினமான உணர்வுகளைச் சமாளிக்க வாடிக்கையாளர்களுக்கு உதவுவதில், குடும்பங்கள் தீவிர பங்கு வகிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

சிகிச்சை நடவடிக்கைகளில் குழு, தனிநபர் மற்றும் குடும்ப ஆலோசனை, உளவியல்-கல்வி அமர்வுகள், கலை மற்றும் இசை சிகிச்சை, யோகா மற்றும் தியானம் போன்ற மன அழுத்த மேலாண்மை நடைமுறைகள் மற்றும் உட்புற மற்றும் வெளிப்புற பொழுதுபோக்கு ஆகியவை அடங்கும். சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைப்பதற்கு வாடிக்கையாளர்களைத் தயார்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக தொழில் பயிற்சி மற்றும் விவசாய நடவடிக்கைகளும் உள்ளன.

ஒவ்வொரு மையமும் அடிப்படை ஆனால் சுத்தமான தங்குமிடம், சீரான உணவு மற்றும் கட்டமைக்கப்பட்ட தினசரி வழக்கத்தை வழங்குகிறது. பயிற்சி பெற்ற ஆலோசகர்கள் மற்றும் ஆதரவு ஊழியர்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுகிறார்கள், திட்டம் முடிந்த பிறகு முன்னேற்றத்தைப் பராமரிக்க வடிவமைக்கப்பட்ட மாதாந்திர பின்தொடர்தல் கூட்டங்கள் மற்றும் கூட்டங்கள்.

இலங்கையில் தற்போது போதுமான மறுவாழ்வு மையங்கள் உள்ளன என்றும் இருப்பினும், தற்போதுள்ள மையங்களில் நெரிசலைக் குறைக்க மேலும் பலவற்றை நிறுவ வேண்டியதன் அவசியத்தை தேசிய ஆபத்தான கட்டுப்பாட்டு வாரியத்தின் மூத்த அதிகாரி ஒருவர் வலியுறுத்தினார்.



# வான் எல்லைக்குள் ஊடுருவினால்...தக்க பதிலடி கொடுக்கப்படும்: ரஷ்யாவுக்கு நேட்டோ எச்சரிக்கை




உறுப்பு நாடுகளின் வான் எல்லைக்குள் ஊடுருவும்போக்கு தொடருமானால்ரஷ்யாவிற்கு தக்க பதிலடி தரப்படும் என நேட்டோ தெரிவித்துள்ளது. நேட்டோ நாடுகளின் உறுப்பினரான எஸ்டோனியாவின் வான் பரப்புக்குள் ரஷ்ய ராணு ஜெட் விமானங்கள் நுழைந்ததற்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பா நாடுகளில் இருக்கும் நேட்டோ நாட்டு எல்லைகளில் சமீபகாலமாக ரஷ்யாவின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

கடந்தவாரம் போலந்து எல்லையில் தென்பட்ட ரஷ்ய ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பனர். தற்போது எஸ்டோனியா வான்பரப்புக்குள் அனுமதி இல்லாமல் அத்துமீறி நுழைந்து ரஷ்ய ஜெட் விமானங்கள் சுமார் 12 மணி நேரம் பரந்துள்ளன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள ஐரோப்பிய ஒன்றியம். இதனை ரஷ்யா தொடர்ந்து செய்தால் விளைவுகள் மோசமாக இருக்கும் என எச்சரித்தது.

மேலும், இது குறித்து பிரஸ்ஸல்ஸில் செய்தியாளர் களிடம் பேசிய நேட்டோ பொது செயலர் மார்பிரட் கடந்த வெள்ளியன்று எஸ்தோனியா வான் எல்லைக்குள் ரஷ்யாவின் மிக் 31 ரக போர் விமானங்கள் நுழைந்ததை ஏற்று கொள்ள இயலாது என்றும் இத்தகைய நிலை தொடருமானால் நேட்டோ தக்க பதிலடி கொடுக்கும் எனவும் குறிப்பிட்டார். (ஐ)

## முடிவுக்கு வரும் இஸ்ரேல்-காசா போர்?: தங்கள் வைத்திருக்கும் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும்: ஹமாஸ் பயங்கரவாதிகளுக்கு பாலஸ்தீன அதிபர் உத்தரவு!!



ஹமாஸ் பயங்கரவாத அமைப்பினர் தாங்கள் வைத்திருக்கும் ஆயுதங்களை உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என பாலஸ்தீன அதிபர் வலியுறுத்தியுள்ள சம்பவம் கவனம் ஈர்த்துள்ளது. கடத்த 2023ம் ஆண்டு ஹமாஸ் படையினர் இஸ்ரேலுக்குள் அத்துமீறி நுழைந்து கண்முடி தனமாக தாக்குதல் நடத்தினர். இஸ்ரேலுக்கும், பாலஸ்தீன காசா பகுதியை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும்இடையேயான போர் இரண்டு ஆண்டுகளை கடந்தும் தற்போது வரை போர் நீடித்து வருகிறது. இருதரப்புக்குமான போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் பேச்சுவார்த்தை நடத்தின. இந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படவில்லை.

இந்த நிலையில், ஐ.நா.வின் பொதுச்சபையின் 80வது ஆண்டு பொதுக்கூட்டம் அமெரிக்காவின் நியூயார்க்கில் நடைபெற்று வருகிறது. இந்த கூட்டத்தில் பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிப்பது, காசா போரை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து விவாதிக்கப்பட்டது. இதற்கிடையில் 140க்கும் மேற்பட்ட நாடுகள் ஏற்கனவே பாலஸ்தீன அரசை அங்கீகரித்துள்ளன. இந்த நிலையில், பாலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்த நாடுகளுக்கு ஹமாஸ் அமைப்பினரின் தலையீடு இருக்கக்கூடாது என வலியுறுத்தப்பட்டது. ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் பாலஸ்தீன அதிகார சபையின் அதிபரான மஹ்மூத் அப்பாஸ் காணொளி வாயிலாக உரையாற்றினார். அப்போது பேசிய அவர் பாலஸ்தீனத்தை அங்கீகரித்த நாடுகளை நாங்கள் பாராட்டுகிறோம். இதுவரை பாலஸ்தீனத்தை அங்கீகரிக்காதவர்கள் அங்கீகரிக்க வேண்டும்என கேட்டுக்கொள்கிறோம் என வேண்டுகோள் விடுத்தார்.

அதேபோல் ஐக்கிய நாடுகள் சபையில் முழு உறுப்பினராவதற்கு உங்கள் ஆதரவை நாங்கள் நாடுகிறோம் என்றும், இனி வரும் காலங்களில் காசாவை நிர்வகிப்பதில் ஹமாஸ் அமைப்பினருக்கு எந்தவித பங்களிப்பையும் வழங்கக்கூடாது என அவர் குறிப்பிட்டார். தொடர்ந்து பேசிய அவர் ஹமாஸ்அமைப்பினர் மற்றும் பிற ஆயுத குழுவினர் தங்கள் வைத்திருக்கும் ஆயுதங்களை பாலஸ்தீன தேசிய ஆணையத்திடம் ஒப்படைக்க வேண்டும். எங்களுக்கு வேண்டியது ஆயுதங்கள் அல்லாத ஒரு சட்டபூர்வமான பாதுகாப்பை கொண்ட ஒருங்கிணைந்த அரசு தான் என பேசினார். இஸ்ரேல் ஹமாஸ் அமைப்பினருக்கு இடையேயான போர் முடிவுக்கு வந்த பின் அதிபர் பதவிக்கான தேர்தல் மற்றும் பார்லிமெண்டுக்கு தேர்தல் நடத்தப்படும் என அவர் கூறினார். இஸ்ரேல் - ஹாமாஸ்க்கு இடையேயான போர் முடிவுக்கு வரும் என்கின்றனர் பொருளாதார அரசியல் வல்லுநர்கள்.(ஐ)



## நள்ளிரவில் அடுத்தடுத்து குண்டுவெடிப்பு நோர்வே மக்கள் வெளியே வர தடை

நோர்வே தலைநகர் ஆஸ்லோவில் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. சந்தேகப்படும்படியான மூவரை பொலிஸார் கைது செய்துள்னளர்.

பார்க்வீன் மற்றும் பைல்ஸ்ட்ரெட் பகுதியில் இந்த இரண்டு குண்டுவீச்சு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளது. அப்பகுதியில் வசிப்போர் அச்சமும், பீதியும் அடைந்தனர்.

நோர்வே பொலிஸார் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அந்த பகுதியைச் சுற்றி வளைத்த அவர்கள், தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது அங்கு வெடிக்காமல் இருந்த கையெறி குண்டு ஒன்றை கண்டுபிடித்து, செயலிழக்கச் செய்தனர்.

அங்கு சுற்றித்திரிந்த சந்தேக நபர்கள் மூவரை கைது செய்து விசாரணைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். குண்டுவெடிப்பு சம்பவம் குறித்து ஆஸ்லோ பொலிஸ் தலைவர் பிரையன் ஸ்கொட்னஸ் கூறியதாவது மத்திய ஆஸ்லோ பகுதியில் குண்டு வெடித்துள்ளது. தேடுதல் வேட்டையின் போது சந்தேகத்தின் பேரில் 3 பேரை கைது செய்திருக்கிறோம். அவர்களுடன் தொடர்புடைய மற்றவர்களையும் தேடி வருகிறோம். சம்பவம் நடந்த இடம், தற்போது முழு பொலிஸ் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. பிஸ்லெட் ஸ்டேடியத்தில் இருந்து கார் ஒன்று சந்தேகத்துக்கு இடமாக சென்றதாக உள்ளூர்வாசிகள் தெரிவித்துள்ளனர். காரில் இருந்து இரு கையெறி குண்டுகளை அவர்கள் வீசிச் சென்றதாக சம்பவத்தை பார்த்தவர்கள் கூறி இருக்கின்றனர். விசாரணை தொடர்கிறது.

குண்டுகள் வெடித்த பகுதிக்குள் யாரும் நுழைய வேண்டாம், குடியிருப்புகளை விட்டு வெளியே வர வேண்டாம் என்று அப்பகுதி மக்களை பொலிஸார் அறிவுறுத்தி இருக்கின்றனர். (ஐ)

# இந்து கோயில்களை குறிவைத்து தாக்கிய காலிஸ்தான் பிரிவினைவாதி கைது: கனடா அரசு அதிரடி



காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்புகள் அமெரிக்காவில் 'சீக்கியர்களுக்கான நீதி' (எஸ் எப்ஜே) என்ற பெயரில் செயல்பட்டு வருகின்றனர். இதன் கனடா நிர்வாகியாக இந்திரஜித் சிங் கோசல் (36) செயல்பட்டு வந்தார். குர்பத் வந்த் சிங் பன்னுனின் வலதுகரமாக கருதப் படும் அவரை கனடா போலீஸார் கைது செய் துள்ளனர். கனடாவில் இந்து அமைப்புகளை, நிர்வாகிகளை குறிவைத்து நடத்தப்பட்ட பல்வேறு துப்பாக்கிச்சூடு சம்பவங்களுக்காக அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கனடா போலீசார் தெரிவித்தனர். இதை தொடர்ந்து ஓஷாவாவில் உள்ள நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார் .(ஐ)

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னேற்றம் தொடர்பான விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டது.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கை நிரந்தர பிரதிநிதியும் முன்னாள் பிரதம நீதியரசருமான ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரியவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## மின்சாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

மேற்படி இளைஞர் குளித்துவிட்டு வந்து உடலில் ஈரத்துடன் மின்னழுத்தியைப் பயன்படுத்தியபோது, அவரை மின்சாரம் தாக்கியுள்ளது.

இதையடுத்து, வீட்டில் இருந்தோர் இளைஞரை மீட்டு தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது, அவர் உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"எதிரணிகள் ஒன்றிணைவதற்குரிய சூழ்நிலை ஏற்பட்டால் நிச்சயம் அதனைச் செய்ய வேண்டும். தேசிய மக்கள் சக்தி அரசு முன்னெடுக்கும் சிறந்த வேலைத்திட்டங்களுக்கு ஆதரவளிக்கப்படும்.

தவறிழைக்கப்பட்டால் நிச்சயம் அவற்றை எதிர்ப்போம். மக்கள் வாக்களிக்கும் வரை அரசியலில் ஈடுபடும் எண்ணத்துடன்தான் இருக்கின்றேன்." - என்றார்.

# இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஜனாதிபதிக்கு கடிதம்!

தமிழ் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளும் பொருட்டு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு ஒரு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அனுப்பி வைக்கப்பட்டுள்ள குறித்த கடிதத்தில்,

தமிழ் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதாக ஜனாதிபதி தனது தேர்தல் அறிக்கையில் உறுதியளித்திருந்தாலும், அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

முதன்மையான தமிழ் அரசியல் கட்சியாக, இந்த விவகாரத்தைத் தீர்க்க அரசாங்கத்துடன் கலந்துரையாடல்களில் ஈடுபடத் தயாராக இருப்பதாகவும், கூட்டத்திற்கு ஜனாதிபதி ஒரு நேரத்தை ஒதுக்க வேண்டும் என்றும் தமிழரசுக் கட்சி கோரியுள்ளது.

# உடல்நிலை காரணமாக வெளிநாடு செல்ல தயாராகும் ரணில் விக்ரமசிங்க!

*முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தமது உடல்நிலை காரணமாக வெளிநாடு செல்வதற்கு ஆயத்தமாகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*அதன்படி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரான்ஸ், இங்கிலாந்து அல்லது இந்தியா போன்ற நாட்டிற்கு செல்ல தயாராகி வருவதாக கூறப்படுகின்றது.*

*தற்போது நிலவி வரும் அரசியல் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, எதிர்க்கட்சியின் பொறுப்பை ஏற்று எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எதிரணியில் உள்ள அரசியல் கட்சிகளிடமிருந்து முன்னாள் ஜனாதிபதிக்கு அழைப்புகள் விடுக்கப்பட்டிருந்தன.*

*அதன்படி, முன்னாள் ஜனாதிபதி இந்த விடயத்தில் கவனம் செலுத்தியுள்ளார்.*

*எனினும் அவரது உடல்நிலை மற்றும் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் காரணமாக ரணில் விக்ரமசிங்க வெளிநாடு செல்ல தயாராகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*இது தொடர்பில் இதுவரை குறிப்பிட்ட திகதிகள் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.*

*மேலும் இந்த ஆண்டு இறுதிக்குள் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளிநாடு செல்வார் என்று அரசியல் வட்டார தகவல்கள் குறிப்பிடுகின்றன*

# அநுர – ரமபோசா சந்திப்பு



நியூயோர்க், செப். 24

ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசாவைச் சந்தித்துப் பேசினார். நியூயோர்க் நகரில் அமெரிக்க நேரப்படி நேற்றுப் பிற்பகல் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

தென்னாபிரிக்கா, இலங்கை இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் இதன்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கை நிரந்தர பிரதிநிதியும் முன்னாள் பிரதம நீதியரசருமான ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# மன்னாரில் புதிய உணவகத்தை சுற்றிவளைத்த அதிகாரிகள்





மன்னார் நகர பகுதியில் அண்மையில் அமைக்கப்பட்ட உணவகம் ஒன்று பல்வேறு சுகாதார சீர்கேடுகள் இயங்கியதன் காரணமாக உணவகம் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

மன்னார் -தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்திருந்த குறித்த உணவகம் உரிய முறையில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமல், அசுத்தமாக உணவுகள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில் நேற்று மன்னார் நகரசபை பொது சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் ஊழியர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது அகப்பட்டது.

குறித்த உணவகம் எந்த ஒரு வியாபர உரிமமும் இன்றி இயங்கி வந்ததுடன், உணவகத்தின் கழிவுநீர் உரிய விதமாக அகற்றப்படாமல், புழுக்கள், இளையான் உருவாகியும்,

அதே நேரம் ஆரோக்கியமற்ற விதமாக உணவுகள் தயாரிக்கப்பட்டிருந்தமை , அத்துடன் உணவுப்பொருட்கள் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சிய படுத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

அதன் அடிப்படையில் குறித்த உணவகத்திற்கு எதிராகவும் உரிமையாளர் மீது பல்வேறு பிரிவுகளில் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐ. நா பிரதிநிதியை தமிழ் பிரதிநிதிகள் சந்தித்தனர்



ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க்அண்ட்ரே பிரான்சே அவர்களிடம் அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றிணைந்து கையெழுத்துப் போராட்டத்தில் பெற்றுக் கொண்ட கையொப்பங்களை கையளிக்களிக்கும் சந்திப்பு செவ்வாய்க்கிழமை (24) அன்று கொழும்பில் உள்ள ஐ.நா அலுவலகத்தில் நடைபெற்றது.

தமிழ் தேசிய கட்சிகளின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சமத்துவ கட்சியின் செயலாளர் நாயகம்.சந்திரகுமார் மற்றும் கட்சிகளின் ஒருங்கிணைப்பாளரான குருசுவாமி சுரேந்திரன் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருக்கு எழுதப்பட்டு ஐ.நா செயலாளர் நாயகத்துக்கும் பாதுகாப்பு சபைக்கும் மனித உரிமைகள் பேரவையின் அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் பிரதி செய்யப்பட்ட இக்கடிதத்தில் சீ.வீ. விக்னேஸ்வரன், கௌ. கஜேந்திரகுமார்பொன்னம்பலம் சார்பில் செ.கஜேந்திரன், கௌ.செல்வம் அடைக்கலநாதன்,தர்மலிங்கம் சித்தார்த்தன், சுரேஷ்பிரேமச்சந்திரன், முருகேசு சந்திரகுமார் மற்றும் எஸ்.நவீந்திரா ஆகியோர் கையொப்பம் இட்டுஇருந்தனர்.

காலம் காலமாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட குற்றங்களுக்கான நீதியை விரைந்து நிலை நாட்டவும், பிரதானமாக செம்மணி உட்பட எமது வடக்கு கிழக்கு தாயகத்தில் அடையாளப்படுத்தப்படும் மனிதப்புதைகுழிகளில் தொடர்ந்தும் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவும், கண்டெடுக்கப்படும் ஆதாரங்களை உறுதிப்படுத்தவும் சர்வதேச மேற்பார்வையுடன் கூடிய ஆலோசனை,தொழில்நுட்பம், நிதி,பாதுகாப்பு என பல கோரிக்கைகள் இக்கடிதத்தில் உள்ளடங்கி இருந்தன.

இச் சந்திப்பின் போது அவற்றை நேரடியாக ஐ.நா ஒருங்கிணைப்பாளரிடம் தமிழ் மக்களின் பிரதிநிதிகளால் வலியுறுத்தப்பட்டன. (ஐ)

# முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மீதான வழக்கு வழக்கை விசாரணைக்கு எடுக்க தீர்மானம்

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மீது இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும்பொருட்டு கொழும்பு மேல் நீதிமன்றம் திகதியிட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா அமைச்சராக செயற்பட்ட காலத்தில் சட்ட விரோதமாக சொத்துக்களை ஈட்டியதாகக் கூறி, அவருக்கு எதிராக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பிலான வழக்கு இன்றையதினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்கு தொடர்பான பல ஆவணங்களை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு பிரதிவாதிக்கு வழங்கியது.

அதன்படி, வழக்கின் விசாரணைக்கு திகதி நிர்ணயிக்குமாறு இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு நீதிமன்றத்தைக் கோரியது.

குறித்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதி, வழக்கை எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹால் உத்தரவிட்டார்.

2010 முதல் 2012 ஆண்டு வரையான காலப்பகுதியில் மேர்வின் சில்வா அமைச்சராகப் பணியாற்றிய போது தனது சட்டப்பூர்வ வருமானத்திற்கு மேலதிகமாக சுமார்150 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை சட்டவிரோதமாகச் சம்பாதித்துள்ளதாக அவருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.09.2025 வெளியிடப்பெற்றது.